ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ நும்மைத் தொழுதோம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நும்மைத் தொழுதோம் ॥

திருவிந்தளூர்

‡நும்மைத் தொழுதோம்⋆ நுந் தம் பணி செய்திருக்கும் நும்மடியோம்⋆
இம்மைக்கின்பம் பெற்றோம்⋆ எந்தாய் இந்தளூரீரே⋆
எம்மைக் கடிதாக் கருமம் அருளி⋆ ஆவா! என்றிரங்கி⋆
நம்மை ஒருகால் காட்டி நடந்தால்⋆ நாங்கள் உய்யோமே (1)

சிந்தை தன்னுள் நீங்காதிருந்த திருவே!⋆ மருவினிய
மைந்தா⋆ அந்தண் ஆலி மாலே!⋆ சோலை மழ களிறே!⋆
நந்தா விளக்கின் சுடரே!⋆ நறையூர் நின்ற நம்பீ⋆
என்தாய்! இந்தளூராய்!⋆ அடியேற்கிறையும் இரங்காயே! (2)

பேசுகின்றதிதுவே⋆ வையம் ஈர் அடியால் அளந்த⋆
மூசி வண்டு முரலும்⋆ கண்ணி முடியீர்⋆ உம்மைக் காணும்
ஆசை என்னும் கடலில் வீழ்ந்து⋆ இங்கயர்ந்தோம்⋆ அயலாரும்
ஏசுகின்றதிதுவே காணும்⋆ இந்தளூரீரே! (3)

ஆசை வழுவாதேத்தும்⋆ எமக்கிங்கிழுக்காய்த்து⋆ அடியோர்க்குத்
தேசம் அறிய⋆ உமக்கே ஆளாய்த் திரிகின்றோமுக்கு⋆
காசின் ஒளியில் திகழும் வண்ணம்⋆ காட்டீர் எம் பெருமான்⋆
வாசி வல்லீர்! இந்தளூரீர்!⋆ வாழ்ந்தே போம் நீரே! (4)

தீயெம் பெருமான் நீரெம் பெருமான்⋆ திசையும் இரு நிலனு-
மாய்⋆ எம் பெருமான் ஆகி நின்றால்⋆ அடியோம் காணோமால்⋆
தாயெம் பெருமான்⋆ தந்தை தந்தை ஆவீர்⋆ அடியேமுக்கே
எம் பெருமான் அல்லீரோ நீர்⋆ இந்தளூரீரே! (5)

சொல்லாதொழியகில்லேன்⋆ அறிந்த சொல்லில்⋆ நும்மடியார்
எல்லாரோடும் ஒக்க⋆ எண்ணியிருந்தீர் அடியேனை⋆
நல்லர் அறிவீர் தீயார் அறிவீர்⋆ நமக்கிவ்வுலகத்தில்⋆
எல்லாம் அறிவீர் ஈதே அறியீர்⋆ இந்தளூரீரே! (6)

மாட்டீர் ஆனீர் பணி நீர் கொள்ள⋆ எம்மைப் பணி அறியா
விட்டீர்⋆ இதனை வேறே சொன்னோம்⋆ இந்தளூரீரே!⋆
காட்டீர் ஆனீர்⋆ நும் தம் அடிக்கள் காட்டில்⋆ உமக்கிந்த
நாட்டே வந்து தொண்டர் ஆன⋆ நாங்கள் உய்யோமே (7)

முன்னை வண்ணம் பாலின் வண்ணம்⋆ முழுதும் நிலை நின்ற⋆
பின்னை வண்ணம் கொண்டல் வண்ணம்⋆ வண்ணம் எண்ணுங்கால்⋆
பொன்னின் வண்ணம் மணியின் வண்ணம்⋆ புரையும் திருமேனி⋆
இன்ன வண்ணம் என்று காட்டீர்⋆ இந்தளூரீரே! (8)

எந்தை தந்தை தம்மான் என்னென்று⋆ எமர் ஏழ் ஏழளவும்⋆
வந்து நின்ற தொண்டரோர்க்கே⋆ வாசி வல்லீரால்⋆
சிந்தை தன்னுள் முந்தி நிற்றிர்⋆ சிறிதும் திருமேனி⋆
இந்த வண்ணம் என்று காட்டீர்⋆ இந்தளூரீரே (9)

‡ஏர் ஆர் பொழில் சூழ்⋆ இந்தளூரில் எந்தை பெருமானை⋆
கார் ஆர் புறவில் மங்கை வேந்தன்⋆ கலியன் ஒலி செய்த⋆
சீர் ஆர் இன் சொல் மாலை⋆ கற்றுத் திரிவார் உலகத்தில்⋆
ஆர் ஆர் அவரே⋆ அமரர்க்கென்றும் அமரர் ஆவாரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥